செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், கோவளம் ஊராட்சியில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், திருப்போரூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் சேகர், பேரூர் செயலாளர் மு.தேவராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புசெழியன், கோவளம் ஊராட்சி மன்ற தலைவர் ஷோபனா தங்கம் சுந்தர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தலைமையில் நேற்று (21.01.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) (மு.கூ.பொ) திருமதி. மா.சௌ.பொன்மாலா, வணிகவரித்துறை கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள் மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

403 அரசு மருத்துவமனைகளுக்கு தேசிய தர உறுதிச் சான்றிதழ்கள்!

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்துரை!

சென்னை, ஜன.22

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (21.01.2025) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக கூட்டரங்கில், தேசிய தர உறுதி பெற்ற 403 அரசு மருத்துவமனைகளுக்கு NQAS தேசிய தர உறுதி நிர்ணய திட்டம் மற்றும் LaQshya - மகப்பேறு அறை மற்றும் கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்டம் மற்றும் MusQan குழந்தைகள் பராமரிப்பு பிரிவு மற்றும் குழந்தை சுகாதார சேவைகளின் தர உறுதி நிர்ணய திட்டங்களின் தேசிய தர உறுதி சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தி விழா பேருரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:

தேசிய தர உறுதி சான்றிதழ்

தேசிய தர உறுதி நிர்ணய திட்டம் மற்றும் மகப்பேறு அறை மற்றும் கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கம் தரம் உயர்த்தும் திட்டம் அதேபோல் குழந்தைகள் பராமரிப்பு பிரிவு மற்றும் குழந்தை சுகாதார சேவைகளின் தர உறுதி நிர்ணய திட்டங்களின் சார்பில் தமிழ்நாட்டிற்கு கிடைக்கப்பெற்றிருக்கின்ற 403 விருதுகளை வழங்கும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். National Quality Assurance Standards Certificate என்று சொல்லக்கூடிய தேசிய தர நிர்ணய விருது 8 மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும், 53 வட்டார சுகாதார மையங்களுக்கும், 206 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், 37 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், 2 துணை சுகாதார நிலையங்கள் என்று 323 சுகாதார மையங்களுக்கு NQAS தர சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் LAQShYA என்று சொல்லக்கூடிய மகப்பேறு அறைகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 64 மருத்துவமனைகளுக்கு தரப்பட்டுள்ளது. அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு 10 சான்றிதழ்களும், மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு 21, துணை மாவட்ட மருத்துவமனைகளுக்கு 27, சுகாதார மையங்களுக்கு 5, நகர்ப்புற சமுதாய சுகாதார மையத்திற்கு 1 என LAQShYA விருதுகள் 64 வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் இந்நிகழ்ச்சியின் மூலம் பிறப்பு முதல் 12 வயதிலான குழந்தைகளுக்கு குழந்தைகள் நல சுகாதார சேவைகள் வழங்குவது என்கின்ற வகையில் முஸ்கான் விருது இன்று 16 மருத்துவமனைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதன்படி முஸ்கான் விருது 16, LAQShYA விருதுகள் 64, NQAS விருதுகள் 323 என 403 விருதுகள் இன்று மக்கள் நல்வாழ்த்துறைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

NQAS விருதுகள்

2012ஆம் ஆண்டு NQAS விருதுகள் வழங்கும் திட்டம் ஒன்றிய அரசினால் தொடங்கப்பட்டது. இந்த விருதுகள் எதனால் வழங்கப்படுகிறது என்றால் மருத்துவமனைகள் தூய்மையாக இருப்பது, பசுமையாக வைத்திருப்பது, மருத்துவ உபகரணங்கள் தூய்மையாக வைத்திருப்பது, இப்படி பல்வேறு தரவுகளின் அடிப்படையில் தேசிய விருதுகள் வழங்கப்படும் நிகழ்வு 2012இல் தொடங்கப்பட்டது.

2012இல் தொடங்கி கடந்த ஆட்சி காலத்தில் NQAS விருதுகளின் எண்ணிக்கை 69, கடந்த மூன்றரை ஆண்டுகளில் இத்துறை பெற்றுள்ள சான்றிதழ்களின் எண்ணிக்கை 55, இதுவரை 755 சான்றிதழ்கள் கடந்த மூன்றரை ஆண்டுகளில் பெறப்பட்டுள்ளது. ஆக 11 மடங்கு அதிகம் என்கின்ற வகையில் சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது. மருத்துவமனைகளை தரம் உயர்த்தும் பணி இந்த ஆட்சிக் காலத்தில் பெரிய அளவிலான உதாரணம்.

கடந்த 2012 முதல் தற்போது வரை ஒட்டுமொத்தமாக பெற்றுள்ள சான்றிதழ்களின் எண்ணிக்கை 824, இந்த சான்றிதழ்களுக்கு நமது துறையின் சார்பில் ஊக்கப்பரிசு வழங்கும் நிகழ்வும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக மாவட்ட அரசு மருத்துவமனைகள், துணை மருத்துவமனைகள் படுக்கை ஒன்றிற்கு என்கின்ற வகையில் ரூ.10,000/ ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.3 லட்சம், மற்றும் துணை சுகாதார மையங்களுக்கு ரூ.18,000/ ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

அதேபோல் LAQSHYA விருது 2018-ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது இந்த அரசு அமைவதற்கு முன்னாள் பெற்றுள்ள விருதுகளின் எண்ணிக்கை 29, இந்த ஆண்டு மட்டுமே நாம் பெற்றிருக்கும் விருது 64, ஒட்டுமொத்த இந்த மூன்றரை ஆண்டுகளில் பெற்றிருக்கும் விருதுகளின் எண்ணிக்கை 82. ஆக இந்த திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் தற்போது வரை வழங்கப்பட்டிருக்கும் ஒட்டுமொத்த விருதுகளின் எண்ணிக்கை 111 ஆகும்.

இந்த விருது பெறும் அரசு மருத்துவமனைகளுக்கு வருடத்திற்கு ரூ.12 இலட்சம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட உள்ளது. மாவட்ட மருத்துவமனைகளுக்கு ரூ.6 இலட்சம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட உள்ளது. வட்டார அரசு மருத்துவமனைகளுக்கு தலா ரூ.4 இலட்சம் ஊக்கத் தொகை வழங்கப்படவிருக்கிறது. இப்படி வழங்கப்படும் ஊக்கத் தொகை அந்த மருத்துவமனைகளின் மருத்துவக்கட்டமைப்பை பாதுகாக்க உறுதியாக இருக்கும்.

முஸ்கான் திட்டம்

அதேபோல் முஸ்கான் திட்டத்தின்கீழ் பிறப்பு முதல் 12 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு தரமான குழந்தை நல சுகாதார சேவை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கம். இத்திட்டம் 2021 தொடங்கியது முதல் இன்று வரை 16 மருத்துவ நிலையங்கள் சான்றிதழ் இன்று வழங்கப்படுகிறது. மேலும் 64 மருத்துவ நிலையங்களுக்கு சான்றிதழ்கள் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆக NQAS 323, LAQShYA 64, முஸ்கான் 16 என 403 விருதுகளை இந்த துறை இன்று பெற்றிருக்கிறது.

இன்னொரு மகிழ்ச்சியான செய்தி அகநானாறு, புறநானூறு தமிழர்களின் பெருமை. இன்னாநூறு திராவிட மாடலின் பெருமை, இது தமிழ்நாடு மருத்துவத்துறைக்கு கிடைத்திருக்கும் மிகப் பெரிய அளவிலான அங்கீகாரம். தமிழ்நாட்டின் மருத்துவத்துறை இன்றைக்கு உலகம் முழுவதும் பேசும் பொருளாக மாறியிருக்கிறது. அண்மையில் அயலக அணி சார்பில் மருத்துவ சுற்றுலா எனும் தரப்பில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டில் இருந்து மருத்துவம் பார்ப்பதற்கு தமிழ்நாட்டிற்கு 15 இலட்சம் பேர் வருகை தருகிறார்கள். உலகம் முழுவதும் மருத்துவம் பார்ப்பதற்கு இந்தியாவிற்கு வருகை தருபவர்களில் 20% பேர் தமிழ்நாட்டிற்கு வருகை தருகிறார்கள் என்கின்ற குறிப்பு ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது.

கடந்த 16.01.2025 அன்று தினத்தந்தி நாளிதழில் வந்திருக்கும் தலையங்கம் இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 திட்டம் தொடர்பானது. இந்த திட்டம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக உள்ளதாக பாராட்டி தலையங்கம் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த திட்டத்தின் மூலம் இதுவரை 3,23,000 பேர் சாலை விபத்தில் சிக்கியவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் காப்புறுதி தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உயர்த்தப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் அரசு செலவிட்டிருக்கும் தொகை ரூ.282 கோடி. இந்த திட்டத்தின் தரவுகளை ஒன்றிய அரசு பெற்று இத்திட்டத்தை இந்தியா முழுமைக்கும் விரைவில் செயல்படுத்திட உள்ளார்கள் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விழா பேருரையாற்றினார்.

இந்நிகழ்வில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (21.01.2025) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக கூட்டரங்கில், தேசிய தர உறுதி பெற்ற 403 அரசு மருத்துவமனைகளுக்கு NQAS தேசிய தர உறுதி நிர்ணய திட்டம் மற்றும் LaQshya மகப்பேறு அறை மற்றும் கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்டம் மற்றும் MusQan குழந்தைகள் பராமரிப்பு பிரிவு மற்றும் குழந்தை சுகாதார சேவைகளின் தர உறுதி நிர்ணய திட்டங்களின் தேசிய தர உறுதி சான்றிதழ்களை வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்வில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில்

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய மொபைல் செயலி!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிமுகம் செய்து தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.22-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (21.1.2025) சென்னை பெருநகர்வளர்ச்சி குழும அலுவலக கூட்டரங்கில்கலைஞர் நூற்றாண்டு புறநகர் பேருந்து முனையத்தின் (KCBT) பயணிகள் அனுபவத்தை மேம்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் KCBT மொபைல் செயலியை தொடங்கி வைத்தார். போக்குவரத்தை நவீனமாக்கும் நோக்கத்துடன் தொடங்கிய இந்த முயற்சி பயணிகளுக்கு மெருகூட்டப்பட்ட மற்றும் சீரான பயண அனுபவத்தை உறுதி செய்கிறது.

பயணிகள் வசதியை மாற்றும் செயலி :-

KCBT மொபைல் செயலி பயணத்தை எளிமையாக்கவும், அணுகுமுறையை மேம்படுத்தவும், பயணியர்களுக்கு தனிப்பட்டஉதவியை வழங்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. Android மற்றும் iOS தளங்களில் இலவசமாக பதிவிறக்கம் செய்யக்கூடிய இந்த செயலி, பயணத்தை எளியதும் பலனளிப்பதுமான தாக மாற்ற பல்வேறு அம்சங்களை கொண்டுள்ளது.

முக்கிய அம்சங்கள்

KCBTக்கு வழிகாட்டுதல்:

பயணியின் தற்போதைய இடத்திலிருந்து KCBTக்கு திசை மற்றும் வழிகாட்டியாக விளங்குகிறது

பேருந்து தகவல்கள்:

TNSTC மற்றும் SETC பேருந்துகளின் நிறுத்தம் விவரங்கள், செல்லும் இடங்கள், நேரம் மற்றும் பயண நேரம் வழங்கப்படுகிறது.

MTC பேருந்து எண்கள், பாதைகள் மற்றும் நிறுத்தங்கள் தொடர்பான தகவல்களையும் வழங்குகிறது.

நிறுத்துமிடம் குறித்த தகவல்கள்:

TNSTC மற்றும் SETC பேருந்துகளுக்கான நடைமேடை மற்றும் தளம்குறித்த விரிவான தகவல்களை வழங்குகிறது.

வசதிகள் மற்றும் அம்சங்கள்:

KCBTயில் உள்ள வசதிகள் மற்றும் அவற்றின் இடங்கள், கட்டண விவரங்கள் உள்ளிட்ட முழுமையான தகவல்களை பயணிகள் அறியச் செய்கிறது.

கருத்து மற்றும் புகார் தீர்வு:

பயணிகள் தங்கள் மொபைல் எண்ணைப் பயன்படுத்தி செயலியின் மூலம் கருத்துகள் அளிக்கவும் மற்றும் புகார்கள் பதிவு செய்யவும் செயலியின் தரத்தை மேம்படுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

உதவி எண் மற்றும் கேள்வி பதில்கள்:

அவசர தேவைக்குஉதவி எண்ணை உடனடியாக அணுகலாம்.

அத்துடன், அவ்வப்போது எழும்சந்தேகங்களுக்கான கேள்விபதில்கள் (FAQ) பகுதி மற்றும் டிஜிட்டல் அறிவிப்பு பலகை மூலம் புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பெறலாம்.

மொழி ஆதரவு:

செயலி தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் கிடைக்கிறது, எனவே அனைவருக்கும் எளிதில் அணுக முடியும்.

KCBT மொபைல் செயலி இலவசமாக இப்பொழுது பதிவிறக்கம் செய்ய:

Google Play Store

Apple App Store

KCBTயின் மேம்பட்ட வசதிகளை அனுபவிக்க பதிவிறக்கம் செய்யுங்கள்.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்கள்,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்அன்சுல் மிஸ்ரா, , முதன்மை செயல் அலுவலர்அ.சிவஞானம், தலைமை திட்ட அமைப்பாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரையில் இன்று

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி. மூர்த்தி – மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, ஜன. 22-

மதுரைக்கு வருகை தரும் கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முரசு கொட்டு முழங்க, கையில் கொடியேந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளதாகவும், இதில் கழகத்தினர் திரளாக பங்கேற்க வேண்டுமாறும் மாவட்டச் செயலாளர்கள் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

அதன் விவரம் வருமாறு:-

கழகத் தலைவர், திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று விட்டு சிவகங்கையிலிருந்து மதுரை வருகிறார்.

அவருக்கு மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட

தி.மு.க. சார்பில் விரகனூர் ரவுண்டானாவில் இன்று (22.01.2025 - புதன்கிழமை) காலை 11 மணியளவில் முரசு கொட்டு முழங்க, கையில் இரு வண்ணக் கொடி ஏந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளது.

எனவே இந்த சிறப்புமிக்க மாபெரும் வரவேற்பு நிகழ்ச்சியில் மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட கழக, மாநில கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதிகழக, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று வரவேற்பு விழாவினை சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

டி.ஆர்.பாலு எம்.பி.– அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

குன்றத்தூர் நகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

நகரச் செயலாளர் கே.சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன. 22 -

குன்றத்தூர் நகரச் செயலாளர்கே.சத்தியமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகர தி.மு.க.பொதுஉறுப்பினர்கள் கூட்டம் நாளை (23.1.2025) மாலை 4 மணியளவில் அறிஞர் அண்ணா திருமண மண்டபம்குன்றத்தூரில்நடைபெறுகிறது. இக் கூட்டத்திற்கு நகர அவைத் தலைவர் எம் சங்கர் தலைமை வகிக்கிறார்.

நகரக் கழக செயலாளர், கோ.சத்தியமூர்த்தி வரவேற்றார்.

டி.கே.குமாரசாமி,டி.எஸ். கலைச்செல்வன், கே.கே.ராஜ மாணிக்கம், ஆ.தமிழ்மாறன், திருநாவுக்கரசு, கே.குணசேகரன், கா.சிதம்பரம், ஜே.மணிமாறன், ஆர்.கே.அபிபியூ நிஷா, என்.கந்தசாமி, டி.என். அருள்மொழி, டாக்டர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் காஞ்சிபுரம்வடக்குமாவட்டக்கழகச் செயலாளர் தாமோ அன்பரசன், கழகப் பொருளாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு ஆகியோர் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினர்.

இதில்மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர்படப்பைஆ.மனோகரன், திருபெருமந்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், டி.எம்.உமாசங்கர், டாக்டர் பாபுதீ.வே.நமச்சிவாயம்,எம். குப்புசாமி, ஜே.முனுசாமி, டி.வி.சரவணன், கே.எஸ். ராஜி, சையத் யூசுப், என்.தீனதயாளன்,எம்.முரளி,மா.அரி, எம்.பக்தவச்சலம், எம்.உமாபதி, ஜே.தயாளன், இ.பலராமன், வஜ்ரவேல், காசிநாதன், நாகேந்திரன், சி.பாபு, டி.ராஜேந்திரன், கே.ரஞ்சித்குமார், கே.தனபால் உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்கின்றனர்.

பொருள் 25.1.2025 அன்று பல்லாவரத்தில் கழகத் தலைவர் - முதல்வர் பங்கேற்கும் வீரவணக்கநாள்பொதுக்கூட்டம்,

2026 சட்டமன்ற தேர்தல் பணி கழக வளர்ச்சிப் பணி

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (21-1-2025) சென்னை பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய மொபைல் செயலியை (KCBT Mobile App) அறிமுகம் செய்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா ராஜன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், தலைமை திட்ட அமைப்பாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.